**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.295/2017**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.03.2026 | | |
| பெயர்: | ராஜேந்திரன் (PW3– Cross ) | தகப்பனார் பெயர்: | சுப்ரமணியன் |
| கிராமம்: | வழுதலைக்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 65/2026 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 09.03.2026**

**(ஆரம்பித்த நேரம்– 11.54)**

நான் சாட்சி கையெழுத்து செய்த (வா.சா.ஆ.12) உயில் எப்போது எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதியின் தந்தை சம்பந்தம் உயிரோடு இருக்கும்போது உயிலை எழுதினாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உயிலை எழுதியவர் யார் என்றும் எனக்கு தெரியாது. உயிலில் சம்பந்தம் கையெழுத்து செய்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். உயிலில் என்ன எழுதப்பட்டிருக்கிறது எனக்கு தெரியாது என்றால் ஞாபகம் இல்லை.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 11.58)**